முருகப்பெருமான் துணை

**மகான் சூதமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.02.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. சித்திமிகு ஞானவழி காட்டும்
சிவராஜ யோகியே அரங்கனே
யுத்தமின்றி சன்மார்க்க வழி
உயிர்கொலை நீக்கி தயவாய் மக்கள்
2. மக்கள் வாழ அருள்புரிகின்ற
மாதவராஜனே ஞான தேசிகனே
ஆக்கமுடன் உன் பெருமை கூறி
அருளுவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை சோபகிருது கலைதிங்கள்
அச்சமற எழுநான்கு திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 28 ம் நாள், 11.02.2024, ஞாயிற்றுக்கிழமை)
ஆசிதனை சூதமுனிவர் யானும்
ஆற்றல்பட அகிலம் மேம்பட உரைப்பேன்
4. உரைக்கவே இயற்கை சீற்றம்
உலக மக்களிடை பற்றியுள்ள
போர் கலகம் யுத்தம் அழிவு
பேதமையான இவை நிலை அனைத்தும்
5. அனைத்தும் அகற்றி மீட்கும்
அவதாரம் புரிந்த அரங்கன்
ஞானமாகத் தரும் வழிகளை
நம்பிக்கை வைத்து உலக நாடுகள்
6. உலகநாடுகளின் மக்கள்களும்
உயர்வாய் ஏற்று வந்தால்
கலகம் யுத்தம் மாச்சர்யம்
கலியின் அழிவுகள் எல்லாம்
7. எல்லாம் விலகி ஓடும்
எதற்கும் சாதிமத இன சண்டை
இல்லாத சமாதான நிலை
இயல்பு நிலையாக எங்கும் பெருகி

8. பெருகியே உலகெல்லாம் மாற்றம்
பெரும் பாதுகாப்பாய் கூடும்
தருமபலம் தயவு பலம் மிக்க
தன்னார்வத் தொண்டுள்ளம் கொண்ட

9. கொண்ட மக்களாய் தேறி
குவலயம் எங்கிலும் அரங்கன்
தொண்டர்களாக ஞானவான்கள் ஆக
தேசம் காக்கும் அன்பர்களாக

10. ஆகவே சக்திநிலை கூடி
அகிலம் ஞானவான்கள் நிரம்பிய
வகையான ஞானத்தலைமையாக
வல்லமை கொண்ட ஞான ஆட்சி

11. ஞான ஆட்சி காலமாக மாறும்
நாட்டிடுவேன் அரங்கமகான்
ஞானமே உலகமாற்றம் நிகழ்த்தும்
நாட்டிய துல்லிய ஆசி முற்றே

—சுபம்—